සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## கத்தோலிக்க சமயம் - කතෝලික ධර්මය

தரம் : **9** நேரம்: 2 மணித்தியாலம்

பெயர் /சுட்டெண்:

**பகுதி** I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. பழைய ஏற்பாட்டிலே இறைவனின் இரக்கம், தயவு, அன்புக்கு அடையாளமாக விளங்குவது,
   1) விருத்தசேதனம் 2) மேகம் 3) வானவில் 4) எரியாத முட்செடி

2. ஆண்டவர் நீதித் தலைவர்களை ஏற்படுத்தியது பற்றி கூறும் திருமறை நூலானது
   1) நீதித் தலைவர்கள் 2) அரசர்கள்
   3) திருப்பாடல்கள் 4) நீதி மொழிகள்

3. இஸ்ரயேல் நாட்டை ஒன்றிணைத்து வலிமை மிக்க அரசாக கட்டியெழுப்பிய அரசர்களுள் முதன்மையான அரசன் யார்?
   1) சாமுவேல் 2) சவுல் 3) தாவீது 4) சலமோன்

4. தாவீது அரசரின் தவறை சுட்டிக்காட்டி அவரை நல்வழிப்படுத்திய இறைவாக்கினரானவர்
   1) ஆமோஸ் 2) எசாயா 3) மீக்கா 4) நாத்தான்

5. "நான் இறைவனுக்கு எதிராக பாவம் செய்தேன்." என தன் தவறை ஏற்றுக்கொண்டு மனம் திருத்திய அரசன் யார்?
   1) சாமுவேல் 2) எசேக்கியேல் 3) தாவீது 4) சலமோன்

6. சாலமோன் அரசரால் எருசலேயம் தேவாலயம் கட்டப்பட்டமை தொடர்பாக கூறும் நூல்
   1) 1 சாமுவேல் 2) 2 சாமுவேல் 3) 1 அரசர் 4) 2 அரசர்

7. நம் ஆதிப் பெற்றோர் செய்த பாவத்தினால் நமது பிறப்பிலேயே நமக்கு உரிமையாகும் பாவ இயல்பு சென்ப பாவமாகும் என அறியத்தரும் நூலானது.
   1) பெரிய குறிப்பிடம் 2) சிறிய குறிப்பிடம் 3) திருப்பாடல் 4) அரசர்கள்

8. "உங்களில் யாரேனும் நோயுற்றிருந்தால் திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவர் பெயரால் எண்ணெய் பூசி.......... நோயுற்றவர் குணமாவார்." இவ்வாறு கூறுபவர்
   1) தூய பேதுரு 2) தூய யாக்கோபு 3) தூய தோமா 4) தூய யோவான்

9. புகுமுக அருளடையாளங்கள் உள்ளடக்கிய விடைத்தொகுதியானது,
   1) திருமுழுக்கு, உறுதிப் பூசுதல், நோயில் பூசுதல்
   2) திருமுழுக்கு, நற்கருணை, ஒப்புரவு
   3) திருமுழுக்கு, ஒப்புரவு, நோயில் பூசுதல்
   4) திருமுழக்கு, நற்கருணை, உறுதிப் பூசுதல்

10. இறைவன் மன்னிக்கும் தன்மை கொண்டவர் என்பதை எடுத்துக்காட்டும் உவமையானது
    1) காணாமற்போன மகன் 2) முத்து
    2) செல்வரும் - இலாசரும் 4) புதையல்

♦ **11. - 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| மோசே, சாமுவேல், காயீனிடம், பேதுரு, சலமோன், ஏழைகளை துன்புறுத்தல், கடன்படுதல் |
|---|

11. இஸ்ராயேலரின் கடைசி நீதித் தலைவர் .................................. ஆவார்.

12. இறைவனுக்கு அழகிய தேவாலயம் கட்டியவர் ......................... அரசராவார்

13. .................................. விண்னை நோக்கி கூக்குரல் இடும் பாவமாகும்

14. ......................... சட்டப்படி விபச்சாரத்தில் பிடிபட்டவர்களை கல்லால் எறிந்து கொல்வது வழக்கமாகும்.

14. ஆண்டவர் .................................... நீ ஏன் சினமுற்றிருக்கிறாய் எனக் கேட்டார்.

♦ **16-20 வரையான வினாக்களுக்கு A பகுதிக்குப் பொருத்தமான விடையினை B பகுதியில் இருந்து தெரிந்து சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குள் இடுக.**

| A **பகுதி** | | B **பகுதி** |
|---|---|---|
| 16. தாவீது அரசரால் தோற்கடிக்கப்பட்டவர் | ( ) | 16. திருமணம் |
| 17. தற்கொலை செய்துகொள்வது | ( ) | 17. ஒப்புரவு |
| 18. உறுதிப்பூசுல் மூலம் பெறுகிறோம் | ( ) | 18. சாவான பாவம் |
| 19. நித்திய தண்டனையில் இருந்து விடுதலை பெறும் வழி | ( ) | 19. தூய ஆவி |
| 20. ஓர் அருடடையாளமாகும் | ( ) | 20. கோலித் |

(2x20=40 புள்ளிகள்)

## பகுதி II

♦ **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**

1. 1) திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நீதித்தலைவர்களில் இருவரின் பெயரை எழுதுக.
   2) சாமுவேல் இஸ்ராயேலுக்கு நீதி வழங்க ஆண்டுதோறும் சுற்றுப் பயணம் செய்த இரு இடங்களை எழுதுக.
   3) கன்ம பாவத்தின் இரு பிரிவுகளும் எவை?
   4) தலையாய பாவங்களில் இரண்டை குறிப்பிடுக.
   5) தூய ஆவியானவருக்கு எதிரான பாவங்கள் இரண்டு எழுதுக.
   6) மனம் வருந்துதல் மூலம் பாவ மன்னிப்பு பெறலாம் என்பதை எடுத்துக் காட்டும் இரு உவமைகளை எழுதுக.
   7) மோசேயின் சட்டப்படி விபச்சாரத்திற்கான தண்டனை யாது?
   8) தூய அகுஸ்தினாரின் மன மாற்றத்திற்கு ஏதுவான இரு காரணிகளைக் குறிப்பிடுக.
   9) பாவத்திற்கு கிடைக்கப்பெறும் இருவகையான தண்டனைகளும் எவை?
   10) தூய யாக்கோபு குறிப்பிடுவதன்படி நோயாளர் மட்டில் திருத்தூதர் மேற்கொண்ட இரு செயற்பாடுகள் எவையெனக் குறிப்பிடுக.

(2x10= 20 புள்ளி)

2. 1) நீதித்தலைவர்களின் பணிகள் இரண்டை எழுதுக.
   2) நீதித்தலைவர்கள் மக்களிடம் எடுத்துச்சொன்ன செய்திகள் 3 தருக.
   3) பிறரின் நன்மைக்காக தலைமைத்துவம் ஏற்கும் நீர், நீத்தலைவர்களின் வாழ்வில் இருந்து பெறும் படிப்பினைகள் 5 எழுதுக.

(2+3+5=10 புள்ளி)

3. 1) கன்ம பாவம் என்றால் என்ன?
   2) சாவான பாவத்தின் மூலம் ஏற்படும் விளைவுகள் மூன்று குறிப்பிடுக.
   3) பாவ வாழ்வில் இருந்து விலகி நல்வாழ்வு வாழ நீர் கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 5 தருக.

(2+3+5=10 புள்ளி)

4. 1) நாம் பாவத்திற்கு உட்பட்டு ஒப்புரவு அருளடையாளம் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதனால் ஏற்படும் விளைவுகள் இரண்டு தருக.
   2) பாவத்திற்கு பரிகாரமாக மேற்கொள்ளக்கூடிய கெயல்பாடுகள் மூன்று தருக.
   3) ஒப்புரவு அருளடையாளம் பெறுவதற்கான படிமுறைகள் 5 எழுதுக.

(2+3+5=10 புள்ளி)

5. 1) நோயில் பூசுதல் அருளடையாளம் வழங்கும் அதிகாரம் திருத்தூதர்களுக்கு வழங்கப்பட்ட விதத்தினை எழுதுக.
   2) நோயில் பூசுதல் அருளடையாளம் பெறக்கூடிய மூன்று பிரிவினரைக் குறிப்பிடுக.
   3) நோயாளர் மட்டில் அவர்களை இறைவன் பால் இட்டுச் செல்வதற்கு உம்மால் செய்யக்கூடிய நற்செயல்கள் 5 எழுதுக.

(2+3+5=10 புள்ளி)

6. 1) தாயின் கருவில் உருவான நாள் முதல் எமது வாழ்வு இறைவனுக்கு உரியது என்பதை எடுத்துக் கூறும் இரு விவிலிய நூல்கள் எவை?
   2) மனிதன் தனது வாழ்வை அழிக்க மேற்கொள்கின்ற இறைவனுக்கு எதிரான செயல்கள் மூன்று தருக.
   3) மனித உயிரின் மாண்பினை 5 காரணம் தந்து விளக்குக.

(2+3+5=10 புள்ளி)

7. 1) ஆபேலின் காணிக்கையை கடவுள் ஏற்றுக்கொண்டது ஏன்?
   2) காயீனுக்கு இறைவன் கொடுத்த தண்டனை 3 எழுதுக.
   3) காயீன் - ஆமேல் கதை மூலம் நீர் பெறும் படிப்பினைகள் 5 தருக.

(2+3+5=10 புள்ளி)